ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

01.02.2017 - மலர் 13, இதழ் 49



## இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம்



## போகொட மரப்பாலம்



## உலகில் துருப்பிடிக்காத இரும்புத் தூண்



## வெள்ளை மாளிகை

உட் தோற்றம்

விலை ரூபா 15/-





கலாசார அமைச்சு,
கலாசார திணைக்களம்
இணைந்து நடாத்தும்

## அரச சிறுவர் ஓவிய விழா - 2017

ஓவியப் போட்டி

விபரங்கள் உள்ளே...

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் பிரபல்யமானவர்



# பிஸ்மில்லா கான்

'ஷெனாய்' என்ற இசைக்கருவியைக் கொண்டு உலகெங்கும் இசைக்கச்சேரி செய்தவர் தான் பிஸ்மில்லா கான் ஆவார். இவர் 1916 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி பைகாம்பர் கான், மித்தன் ஆகிய தம்பதியினருக்கு மகனாக இந்தியாவின் பீகார் மாவட்டத்தில் பிறந்தார்.

இவருடைய முன்னோர்கள் அரண்மனையில் இசைச் சேவையில் ஈடுபட்டு வந்தமையால் இயல்பாகவே இசை ஞானம் இவருக்குள் ஏற்பட்டது. இவர் 20 ஆவது வயதில் இவருடைய உறவினரான அலிபக்ஸ் என்பவரை சந்திக்க காசிக்குச் சென்றார். அங்கு அவர் காசி விசுவநாதர் ஆலயத்தில் இசைச் சேவையை மேற்கொண்டிருந்தார்.

இவரே, பிஸ்மில்லா கான் ஷெனாய் எனும் இசைக்கருவியை இயக்குவதற்கு ஆசான் ஆனார்.

ஷெனாய் இசைக்கருவியில் பிஸ்மில்லா கான் கைதேர்ந்த பின்னர் காசி தொடக்கம் உலகெங்கும் பல இசைக் கைச்சேரிகளை செய்து மக்களை மகிழ்வித்தார். இவர் இஸ்லாமியராக இருந்த போதும் காசி பாலாஜி கோயில், சங்கத் மோட்சர், கங்கா மாயா ஆகியவற்றுடனும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். பாமர மக்கள் மீது மிகுந்த அன்பு கொண்ட இவர் இந்தியாவின் முதலாவது குடியரசு ஊர்வலத்தில் பங்கு கொண்டபோது, காசி கங்கையில் ஓடத்தில் பயணிக்கும்போது ஓடம் செலுத்துபவர் பாடும் பாடலையே ஷெனாய் இசைக்கருவி மூலம் இசைத்தார். இதன்போது ஊர்வலத்தில் கலந்து கொண்ட நேரு உள்ளிட்ட பல இந்தியத் தலைவர்களின் பாராட்டை இவர் பெற்றார்.

இந்தியாவிலுள்ள பல இசை பல்கலைக்கழகங்கள் இவருக்கு பல விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது. அத்தோடு, இந்தியாவின் உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருதை 2001 ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசாங்கம் பிஸ்மில்லா கானிற்கு வழங்கி அவரின் இசைச் சேவையை கௌரவித்தது. 'ஷெனாய்' என்ற இசைக்கருவி மூலம் உலக மக்களை மகிழ்வித்த பிஸ்மில்லா கான் 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி உயிர் நீத்தார்.



ஷெனாய் இசைக் கருவி

## தெரிந்து கொள்வோம்



★ 'டெனிம்' துணி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

லெவி ஸ்ட்ராஸ்



★ அதிக அளவில் சர்வதேச நேரங்களைக் கொண்ட நாடு எது?

ரஷ்யா



★ முதன்முதலில் விமானத்தைப் போரில் பயன்படுத்திய நாடு எது?

இத்தாலி




★ இந்திய சினிமா வரலாற்றில் முதல் பேசும் படம் எது?

ஆலம் ஆரா (1931)



★ காகம் ஒன்று ஒரு மணித்தியாலத்தில் எவ்வளவு வேகத்தில் பறக்கின்றது?

45 மைல் வேகத்தில்



★ நாக்கு இல்லாத விலங்கினம் எது?

முதலை




★ திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்ட முதலாவது மொழி எது?

இலத்தீன்




★ புனைப் பெயர் சூட்டும் பழக்கம் தோன்றிய நாடு எது?

சீனா

# பெக்டீரியாக்களை கொல்லக்கூடிய ஒளித் துணிக்கை கண்டுபிடிப்பு





இன்றைய மருத்துவத் துறையில் பெக்டீரியாக்கள் போன்ற ஏனைய நுண்ணங்கிகளினால் ஏற்படும் நோய்த் தாக்கங்களை குணப்படுத்த பல சிகிச்சை முறைகள் காணப்படுகின்றன. இருப்பினும், குறிப்பாக பெக்டீரியாக்கள் நேரத்துக்கு நேரம் தம் அமைப்பை மாற்றுவதனால் அவற்றுக்கு எதிரான சிகிச்சை முறையினை உருவாக்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. அதனால் சில பெக்டீரியாக்களுக்கான எதிர்ப்பு சிகிச்சைகளுக்கு கட்டுப்படாத தன்மை அதிகரித்துவருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வாறான பெக்டீரியாக்களை நெனோ துணிக்கைகள் வெளியிடும் ஒளி அலைகளைக் கொண்டு அழிக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுவாமலும் அழுத்தாமலும் அணியக்கூடிய மேற்சட்டை



அமெரிக்காவின் வூல் என்ட் ப்ரின்ஸ் ஆடை உற்பத்தி நிறுவனமானது, ஆண்களுக்கென புதுவித மேற்சட்டை (Shirt) ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஷேர்ட்டை கழுவாமலும் அழுத்தாமலும் (அயன் செய்யாமலும்) 100 நாட்களுக்குப் பயன்படுத்தலாம் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனை அணிந்து செல்லும்போது எவ்வளவு வியர்த்தாலும் இதில் இருந்து துர்நாற்றம் வீசுவதில்லை. அத்துடன், இதில் மடிப்புகள், சுருக்கங்களும் ஏற்படாதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

வூல் என்ட் ப்ரின்ஸ் நிறுவனம் இந்த ஷேர்ட்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், தமது நிறுவனத்தின் சில ஊழியர்களுக்கு இவற்றை அணிவித்து, உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பி ஆய்வுசெய்து பார்த்துள்ளது. அதற்கமைய, மாறுபட்ட சூழலிலும் பல்வேறு நாடுகளில் நிலவும் மாறுபட்ட காலநிலைகளின்போதும் இந்த ஷேர்ட்கள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதை அந்நிறுவனம் பரீட்சித்துப் பார்த்துள்ளது. ஆக, எந்தவொரு நிலையிலும் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை என்றே கூறப்படுகின்றது.

**'இந்த ஷேர்ட்டை கழுவாமலும் அழுத்தாமலும் 100 நாட்களுக்குப் பயன்படுத்தலாம். இதனை அணிந்து செல்லும்போது எவ்வளவு வியர்த்தாலும் இதில் இருந்து துர்நாற்றம் வீசுவதில்லை'**



இந்த ஆடை வூல் நூல்களால் நெய்யப்பட்டுள்ளது. வூல் நூலானது, பருத்தி நூலைவிட ஆறு மடங்கு அதிக காலம் பாவிக்கக்கூடியதாகும். மேலும், பருத்தி நூலைவிட, வூல் நூல் உறுதிமிக்கது. அதன்படி, வூல் நூலை 20,000 தடவைகள் மடிக்க முடியும். ஆனால், பருத்தி நூலை 3,200 தடவைகளே மடிக்கலாம். பின்னர் அது அறுந்துவிடும். அத்துடன், பருத்தியினாலான ஆடையை அணிந்திருக்கும்போது, எமக்கு வியர்த்தால் உடனே துர்நாற்றம் வீசும். ஆனால், வூல் துணியினாலான ஆடையை அணிந்திருக்கும் போது, எமக்கு வியர்த்தால் அந்த துணியானது வியர்வையை உறிஞ்சிக் கொள்வதோடு, அதனை ஆவியடையச் செய்துவிடும். இதனால், உடலிலிருந்தும் ஆடையிலிருந்தும் துர்நாற்றம் வீசுவதில்லை.



விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652


வெல்லுங்கள்
மாதம் ஒரு சைக்கிள்!

24 ஆம் வருடத்தை முன்னிட்டு



**நீங்கள் செய்ய வேண்டியது**

இந்த மாதத்திற்கான விஜய் பத்திரிகைகளில் வெளிவருகின்ற 'மாதம் ஒரு சைக்கிள்' கூப்பன்களை சேகரித்து அவற்றை ஒன்றிணைத்து மாத இறுதியில் எமக்கு தபாலிடுங்கள். குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு வெற்றிப் பரிசாக சைக்கிள் வழங்கப்படும்.

**விஜய் மாதம் ஒரு சைக்கிள்**

மாதம்: பெப்ரவரி
திகதி: 01.02.2017

பெயர் : ....................
ஆண்/பெண் : ....................
முகவரி : ....................
....................
தொ.பே.இல : ....................
வயது : ....................
பாடசாலை : ....................


பரிசை நேரில் பெற்றுக்கொள்வேன் என உறுதிப்படுத்துகிறேன்

....................
கையொப்பம்

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்ப



சிவநிர்தானந்தன் எனும் துறவி ஒருவர் நாடெங்கிலும் நன்னெறி பரப்பும் நோக்குடன் தன் சீடனான சிவயோகன் என்பவரையும் அழைத்துக் கொண்டு யாத்திரை ஒன்றை மேற்கொண்டார். இவர்கள் சென்ற பல ஊர்களில் இவர்களுக்கு வரவேற்பு சிறப்பாக இருக்கவில்லை அத்தோடு, அந்த ஊர்களில் வசித்த மக்கள் கேலி செய்தும் தீய சொற்களைக் கூறியும் துறவியை சீண்டினார்கள். சில ஊர்களில் துறவிகளைக் கண்டு கொள்ளாது அவமரியாதை செய்தார்கள்.

ஆனால் சில ஊர்களில் சிறந்த மரியாதை செய்தும் துறவிகளின் நன்னெறி சொற்பொழிவுகளைக் கேட்டும் அவர்களை விருந்தளித்து, மகிழ்வித்தும் வழியனுப்பினார்கள்.

இதனை அவதானித்த சிவயோகன் ஆழ்ந்த சிந்தனை கொண்டான். துறவி அவனை நோக்கி "சிவயோக என்ன சிந்தித்துக் கொண்டிருக்கின்றாய்?" எனக் கேட்டார்.

அதற்கு சிவயோகன் "குருவே நீங்களோ ஒழுக்க சீலர். துறவில் சிறிது கூட வழுவாத உங்களை உலகம் போற்றி மதிக்க வேண்டும். உங்கள் சீடனான நானும் எந்தத் தகுதியிலும் குறைந்தவர் அல்லர். ஆனாலும் நமக்கு பல ஊர்களில் உரிய மரியாதை கிடைக்கவில்லையே இதற்கு நீங்கள் தான் விளக்கம் தர வேண்டும்" என்றான். துறவி பதில் ஒன்றும் கூறாது நடந்து சென்று கொண்டிருந்தார். அவர் சென்ற வழியில் விலை மதிப்பற்ற மாணிக்கம் ஒன்று கிடந்தது. அதை எடுத்து துறவி சிவயோகனிடம் கொடுத்தார்.

"பக்கத்து ஊர் சந்தைக்குச் சென்று ஒவ்வொரு கடையாக நுழைந்து இதன் மதிப்பைக் கேட்டு வா" என்று துறவி கூறினார்.

பக்கத்து ஊர் சந்தையில் இருந்த காய்கறிக் கடைக்காரனிடம் முதலில் சீடன் சென்று கேட்ட போது, இரண்டு கத்தரிக்காய் தருவதாகச் சொன்னான். இப்படியே ஒவ்வொரு கடைக்காரர்களும் அந்த மாணிக்கத்தின் விலைக்கு குறைவாக தான் சொன்னார்கள். ஆனால் நகைக் கடைக்காரர் ஒருவர் "அருமையான மாணிக்கக் கல் இதற்கு ஆயிரம் பொற்காசுகள் விலையாகத் தருகிறேன்" என்றான்.

துறவியிடம் திரும்பி வந்த சீடன் ஊர் சந்தையில் நடந்தவற்றைக் கூறினான். இதனைக் கேட்ட துறவி "இந்த மாணிக்கத்தின் மதிப்பை உண்மையிலேயே உணர்ந்தவன் நகைக் கடைக்காரன் ஒருவன் தான். மற்றவர்கள் இதன் பெறுமதியை உணராது, சாதாரண விலைக்குக் கேட்டனர். அதுபோல நம் மதிப்பை உணர்ந்து நம்மை வரவேற்றுப் போற்றுபவர் வெகு சிலர் தான். பலருக்கு எமது மதிப்புத் தெரியாது, அதனை எண்ணிக் கவலைகொள்ளாதே" என்று கூறினார் துறவி.

# நீதி மணி

மணிகண்டன் எனும் மன்னனின் அரண்மனை தானியக் கிடங்கிலிருந்து திருட்டுப் போய்க் கொண்டிருந்தது. திருடன் யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை. சந்தேகப்படும் நிலையில் உள்ளோரைக் கைது செய்யும்படி உத்தரவிட்டிருந்தார் மன்னன். அதில் உண்மையான திருடனும் இருந்தான், ஆனால் திருடன் யாரென்று அடையாளம் காணமுடியவில்லை. அதனால் மன்னன் நீதிபதியின் உதவியை நாடினான்.

நீதிபதியின் எதிரே கைதான அனைவரும் நிறுத்தப்பட்டிருந்தனர். "குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதி வழங்கும் பொறுப்பை கோயில் கண்டா மணியிடம் ஒப்படைத்திருக்கிறேன். நீங்கள் எல்லோரும் அங்கே வாருங்கள்" என்றார் நீதிபதி.

நீதிபதியின் ஆணைப்படி மறுநாள் அனைவரையும் கோயிலுக்கு அழைத்து சென்றனர் காவலாளிகள். கண்டாமணியை சுற்றி கறுப்பு நிறத்தால் மறைக்கப்பட்டிருந்தது. நீதிபதி கைது செய்யப்பட்டவர்களை நோக்கி "நீங்கள் ஒவ்வொருவரும் கிழக்கு வாயில் வழியாக கோயிலிற்கு உள்ளே நுழைந்து மணியின் அருகில் சென்று உங்கள் உள்ளங்கை மணியின் மீது பதியும்படி, அதைத் தொட்டால் போதும் யார் திருடனோ அவன் கைபட்டவுடன் மணி ஒலி எழுப்பி அதிரும், குற்றமற்றவர்களானால் எவ்வித ஒலியும் இருக்காது" என்றார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒவ்வொருவராக உள்ளே சென்று மணியின் மீது கையை வைத்தனர். ஆனால் மணியோசை எழுப்பவில்லை. அதன்பின்னர் அனைவரின் கைகளையும் நீதிபதி பரிசோதித்தார். அனைவரின் கைகளிலும் கருப்புக் கறையை அவதானித்தார். இறுதியாக இருந்த தானியக் கிடங்கின் பிரதான காவாளியின் கைகளை பரிசோதித்த நீதிபதி "இவன் தான் குற்றவாளி" என உரக்கக் கூறினார்.

அவன் மிரண்டான் "மணிதான் ஒலிக்கவில்லையே" என்று கூறினான். அதற்கு நீதிபதி "குற்றம் புரிந்ததினால் நீ மணியைத் தொடவே இல்லை, தொட்டால் ஒலித்து உன்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்ற பயம்! மணியைத் தொட்டவர்கள் கைகளிலெல்லாம் அதில் பூசப்பட்டிருந்த விளக்குக் கரி படிந்திருக்கிறது. உனது கைகளில் விளக்குக் கரி இல்லை.. உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்கவே மணியின் மேற்புறத்தில் கரியைப் பூசச் செய்தேன்" என்றார்.


இப்படிச் சொன்னவுடன் அந்தத் திருடன் நீதிபதியின் கால்களில் விழுந்து



குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதியின் மதியுகத்தைக் கண்டு வியந்த மன்னன் நீதிபதியை மக்கள் முன்னிலையில் பாராட்டி வெகுமதிகளை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாஜ்மஹால்




இந்தியாவின் ஆக்ரா நகரின் அடையாளமாகத் திகழும் அழகிய கல்லறை நினைவுச் சின்னம் இது ஆகும். பளிங்குக் கற்களோடு ஜாஸ்பர் கற்கள், ஜேட் மற்றும் கிரிஸ்டல்களையும் பயன்படுத்தி தாஜ்மஹால் கட்டப்பட்டுள்ளது. இதனை முகலாய பேரரசனான ஷாஜஹான் தன் அன்பு மனைவியான மும்தாஜ் நினைவாக கட்டியதாகும். கி.பி 1629 ஆம் ஆண்டில் மும்தாஜ் குழந்தையை பிரசவிக்கும் பொழுது மரணத்தை தழுவினாள். அதனால், பெரும் சோகத்தில் மூழ்கிய பேரரசன் தாஜ்மஹாலைக் கட்டியதாக வரலாறு கூறுகின்றது.



## கட்டட நிர்மாண முறை

பாரசீக, இந்திய மற்றும் துருக்கிய கட்டடக் கலைஞர்களின் எண்ணக்கருவில் உருவான கைவண்ணமாக இதனைக் கருதலாம். அபிஉலகரீம், மாமூர்கான், மக்ரமத்கான் ஆகிய கலைஞர்களும் பிரதான கட்டடக் கலைஞர் உஸ்டாட் அகமட்லாஹோரி ஆகிய கலைஞர்களின் தலைமையில் இது நிர்மாணிக்கப்பட்டது.



வெண் பளிங்கு கற்களாலான பெரிய அளவினைக்கொண்ட சதுர அடித்தளத்தின் மீது தாஜ்மஹால் கட்டப்பட்டுள்ளது. அடித்தளத்தின் ஒரு பக்க நீளம் 55 மீற்றர்களாகும். பளிங்கினாலான கோள வடிவ மாளிகை இதில் முக்கிய பகுதியாகும். அது 35 மீற்றர் உயரமானது. இதன் பிரதான கல்லறை 1648 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அதன் பின்னர் 5 வருடங்களில் துணைக்கட்டடங்கள் அனைத்தும் கட்டப்பட்டன. பிரதான பகுதியில் ஷாஜஹானினதும் மும்தாஜினதும் கல்லறைகள் அமைந்துள்ளன.

பூங்காவின் மத்தியில் பளிங்கினாலான நீர்த்தடாகம் உள்ளது. 1631 முதல் 1654 வரை சுமார் 22 வருடங்களில் கட்டி முடிக்கப்பட்ட தாஜ்மஹால் 1983 ஆம் உலக மரபுரிமையாக யுனெஸ்கோ நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, ஏழு உலக அதிசயங்களில் தாஜ்மஹாலும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

விஜய்

# அரச சிறுவர் ஓவிய விழா 2017

**உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச கட்புல கலை ஆலோசனைக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள 'அரச சிறுவர் ஓவிய விழா -2017' தொடர்பாக ஜனவரி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 10 ஆம் திகதி வரை கொழும்பு-07 தேசிய கலா பவனத்தில் படைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

* கிடைக்கப்பெறும் ஓவியங்களுள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 சிறந்த ஓவியங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவை இரண்டாம் சுற்றுப் போட்டிக்கு உட்படுத்தப்படும். இரண்டாம் சுற்றுக்கான போட்டிகள் விசேட பயிற்சிப் பட்டறையுடன் நடைபெறும்.
* முதலாம் சுற்றிலிருந்து தெரிவாகியிருந்த வெற்றியாளர்கள் அனைவருக்கும் அன்றைய தினம் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.
* இரண்டாம் சுற்றில் தெரிவாகும் ஓவியங்கள் 'அரச சிறுவர் ஓவிய விழா 2017'வில் இறுதித் தெரிவிற்கு முன்வைக்கப்படும்.
* இறுதியாக வெற்றிபெறும் சிறுவர் ஓவியங்களுக்கு 'அரச சிறுவர் ஓவிய விழா' வைபவத்தின்போது, பரிசுகள், விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### போட்டிப் பிரிவுகள்

* ஆரம்பப் பிரிவு - வயது 05-06
* முதுநிலை ஆரம்பப் பிரிவு - வயது 07-09
* கனிஷ்ட பிரிவு - வயது 10-12
* சிரேஷ்ட பிரிவு - வயது 13-15
* சிரேஷ்ட இரண்டாம் நிலைப் பிரிவு - வயது 16-18

### போட்டி நிபந்தனைகள்

* உங்களுக்கு விருப்பமான எந்தவொரு தலைப்பிலும் ஓவியத்தை வரையலாம்.
* உங்களுக்கு விருப்பமான எந்த ரக நிறப்பூச்சையும் பயன்படுத்தலாம்.
* ஓவியம் 18x14 அங்குலம் அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
* ஒருவர் ஒரு ஓவியத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
* அனுப்பப்படும் ஓவியம் இதற்கு முன்னர் வேறு எந்தவொரு போட்டிக்கும் அனுப்பப்பட்டதாக இருத்தல் கூடாது.
* உங்களுடைய நிரந்தர வதிவிட மாவட்டத்திலிருந்தே ஓவியத்தை அனுப்ப வேண்டும்.
* ஓவியங்கள் தகுதிவாய்ந்த நடுவர் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டு அவற்றிலிருந்து தெரிவுசெய்யப்படும் வெற்றியாளர்கள் மாத்திரமே குறித்த மாவட்டத்தின் சார்பில் அடுத்த சுற்றிற்கு தெரிவாவர்.
* போட்டி நடைபெறும் திகதி, இடம், நேரம், ஆகியன பின்னர் அறிவிக்கப்படும்.
* ஓவியத்தின் பின்புறம் விபரங்கள் அனைத்தும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும். விபரங்கள் சரிவர வழங்கப்படாத படைப்புகள் போட்டிகளிலிருந்து நீக்கப்படும்.
* நீங்கள் அனுப்பும் ஓவியங்கள் எக்காரணம் கொண்டும் மீண்டும் உங்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

(விபரங்கள் வேறு தாளில் எழுதப்பட்டு ஓவியத்தின் பின்புறம் ஒட்டப்படுமாயின் அவை கழன்று விடாதபடி ஒட்டவும்)

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர் :..........
2. முதலெழுத்துடன் பெயர்: ..........
3. பிறந்த திகதி: ..........
4. 31/12/2016 திகதியின்போது வயது: ..........
5. போட்டிப் பிரிவு: ..........
6. வதிவிட முகவரி: ..........
7. நிரந்தர வதிவிட மாவட்டம்: ..........
8. தொலைபேசி இலக்கம்: ..........

பின்புறம் உள்ள ஓவியம் எனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்கிறேன்.

..........

போட்டியாளரின் கையொப்பம்



**ஓவியங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:**

தேசிய ஒருங்கிணைப்பாளர்,
அரச கட்புல கலை ஆலோசனைகள் குழு,
தேசிய கலா பவன்,
ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு-07.
தொடர்புகளுக்கு - 011 2882551/ 011 2872031

**ஓவியம் அனுப்பப்பட வேண்டிய ஒழுங்குமுறை:**

சித்திரம் இடப்படும் கடித உறையிலோ அல்லது பொதியிலோ இடது மேல் முனையில் 'அரச சிறுவர் ஓவியப்போட்டி 2017' என குறிப்பிடவும்.

மேலதிக விபரங்களை 03.02.2017 ஆம் திகதி அரச வர்த்தமானியிலும் www.culturaldept.gov.lk எனும் இணையத்தளத்திலும் பார்வையிடலாம்

இது தொடர்பான மேலதிக விபரங்களை உங்கள் பிரதேச செயலகத்திலோ, மாவட்ட செயலகத்தின் கலாசாரத்துறை அதிகாரியிடமோ பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரிகத்தின் தொட்டில்
# மொசபொத்தேமியா

உலகின் முதலாவது குடியிருப்பாக மொசபெத்தேமியா கருதப்படுகிறது. இது யூப்ரடீஸ், டைகிரீஸ் ஆகிய இரு நதிகளின் பள்ளத்தாக்குகளுக்கிடையே அமைந்துள்ளது. இங்கு இற்றைக்கு 7,000 ஆண்டுகளுக்கு முன்னர் சுமேரியர்கள் எனும் மக்கள் கூட்டத்தினர் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தனர்.

## நிலையம்

ஜார்மோ எனும் மலையின் தெற்குத் திசையில் பாய்ந்தோடும் இரு நதிகளான யூப்ரடீஸ், டைகிரிஸ் ஆகிய நதிகளின் பள்ளாத்தாக்குப் பகுதியே இந்த நாகரிகத்தின் நிலையமாக கருதப் படுகின்றது. இது இன்று சிரியா, ஈராக் ஆகிய இரு நாடுகளின் எல்லைகளாக விளங்குகின்றது.






சு...
புக...
இரு...
களு...
ஆ...
கி.மு...
நகர...
அ...
பார...
வர...

## எழுத்துக்கலை



எழுத்துக்கலையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் இவர்கள்தான் என்ற கருத்தும் நிலவுகிறது. 600 எழுத்துக்களைக் கொண்ட எழுத்துக்களின் வரிசையை இவர்கள் கண்டுபிடித்துள்ளனர். தொல்பொருள் ஆய்வாளர்கள் இதனை குறியீட்டு எழுத்துக்கள் என்று கூறுகின்றனர். களிமண்ணாலான பலகை போன்ற அமைப்பில் விடயங்களை பதிவு செய்திருக்கிறார்கள். இதற்காக மிருகங்களின் எலும்புகளை எழுத்தாணிகளாகப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் எழுத்துக்களாக அன்றி, படங்களாகவும் குறிப்புகளை வரைந்துள்ளனர்.

## உலகின் முதலாவது நூல் நிலையம்

இவர்களால் எழுத்துருக்களாகப் பதிவு செய்யப்பட்ட களிமண் பலகைகள் நிறைந்த கட்டடமொன்றினை 'நிபுர்' என்ற புராதன நகரத்தில் இருந்து கண்டுபிடித்துள்ளனர். இந்த கட்டடம் முதலில் தேவாலயமாக அனுமானிக்கப்பட்டாலும் பின்னர் இங்கு கண்டெடுக்கப்பட்ட பல களிமண் பலகைகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து இதுவே உலகின் முதன்மையான நூல் நிலையம் என அறியப்பட்டது.



வி...
கி.மு. 8700...
கள் உருவாக்க...
ஒன்று வட ஈரா...
கி.மு. 6000...
உருவாக்கப்ப...



## கட்டடக்கலை

இதுவரை உலகில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான கட்டட நிர்மாணத் திட்டவரைபு இவர்களிடையே இருந்தது. அதேபோல் கி.மு. 4000 ஆம் ஆண்டளவில் உலகின் முதலாவது கால்வாயை அமைத்த பெருமையும் மெசபொத்தேமியாவில் வாழ்ந்த சுமேரியர் என்பவர்களையே சாரும். கி.மு.5300 ஆம் ஆண்டளவில் உலகில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது நகரமாகிய உர் (Ur) இந்நாகரிகத்தைச் சேர்ந்தது.



## ஹமுராபி மன்னன்

மெசபொத்தேமியாவில் தோன்றிய புத்திக்கூர்மை மிக்கவராகவும், கலைஞராகவும் திகழ்ந்த ஹமுராபி மன்னர் கி.மு. 1792-1750 வரை ஆட்சிபுரிந்தார். இவரே, ஒன்றுபட்ட மெசபத்தேமியாவை உருவாக்கினார். அக்காலகட்டத்தில் இந்நாகரிகத்தினர் குற்றங்களைச் செய்தால் என்னென்ன தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்படவில்லை. இவற்றை ஒழுங்குபடுத்தியவர் ஹமுராபி ஆவார். 282 குற்றங்கள் பட்டியலிடப்பட்டு 12 களிமண் பலகைகளில் எழுதப்பட்டன. இங்கு வருகை தந்த ஹிட்டைட்டுகள் மற்றும் கெஸிட்கள் போன்றவர்களால் 1595 ஆம் ஆண்டில் ஹமுராபியின் ஆட்சி வீழ்ச்சி அடைந்தது.





புராதன ஏழு உலக அ...
பாபிலோனிய தொங்கு ...
மிக முக்கியமானதொன்று...
கி.மு. 605 முதல் நாற்பது...
பாபிலோனிய பகுதியை ...
'நெபுகாட்நேஸர்' எனும் ம...
கப்பட்டது. மலைப்பிரதே...
மரஞ்செடிகொடிகளைக் ...
கும் தோட்டம் அமைக்கப்...
தூண்களை எழுப்பி, அவ...
அடுக்குத் தளங்களில் தோ...
கப்பட்டன. நெபுகாட் நே...
மனைவியின் தனிமையை...
இந்த தொங்கும் தோட்ட...
பட்டதாக வரலாறு கூறுகி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகம்



மேரியர்கள் இங்கு பெரும் முன்னேற்றகரமான குடியிருப் ளை ஆரம்பித்த வேளையில் அதற்குச் சமகாலத்தில் அருகில் ந்த பிரதேசங்களில் ஆகேடியர்களும், பபிலோனியர் ம் அசேரியர்களும் வாழ்ந்தனர். அதேவேளை, கேடிய மன்னர்களில் ஒருவனாகிய சார்கோன் (Sargon) . 2300 இல் ஆகேடியர்களினதும் சுமேரியர்களினதும் ங்களை ஒன்றிணைத்தார். இவ்விதமாக நாகரிக வளர்ச்சி டந்த மெசபொத்தேமியாவில் பாபிலோனிய, அசேரிய, ீக, கிரேக்க, பாத்திய, இஸ்லாமிய, ஒட்டோமன் என றுகள் பல்வேறு காலகட்டங்களில் தோன்றியது.



## சமூக முறை

மொசபெத்தேமிய நாகரிக மனிதர்கள் புத்திசாலிகளாக திகழ்ந்தனர். இவர்களிடையே மதகுருமார்கள், சாஸ்திர நிபுணர்கள் பல்வேறு வகை அறிஞர்கள் இருந்தனர். அதில் மதகுருக்களுக்கு சமூகத்தில் அதிக மரியாதை இருந்தது. மன்னர்கள் நாட்டை ஆண்டனர். மக்கள் விவசாய வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டிருந்ததோடு, நவீன கைத்தொழில்களையும் தோற்றுவித்தனர்.

## நா த் தொழில்நுட்பம்

- செம்பைப் பயன்படுத்தி ஆபரணங் ப்பட்டது. இந்த ஆபரணங்களில் க்கில் கண்டுபிடிக்கப்பட்டது.
- முதலாவது கலப்பை (ஏர்) ட்டது

கி.மு. 5300 - முதலாவது நகரமாகிய உர் (Ur) நகரம் நிர்மாணிக்கப்பட்டது

கி.மு. 4000 - சுமேரியர்களின் எழுத்துக்கலை ஆரம்பம்

கி.மு. 3200 - சக்கரம் கண்டுபிடிப்பு

கி.மு. 2800 - சவர்க்காரம் உற்பத்தி செய்யப்பட்டது

கி.மு. 250 - பாக்தாத் பற்றரி எனும் உலகின் முதலாவது மின் பற்றரி உருவாக்கப்பட்டது

மொசபெத்தேமிய நாகரிக மக்கள் நவீன உலகிற்கு எத்தனையோ விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். இன்று நாம் பயன்படுத்தும் 0-9 வரையிலான இலக்க வரிசையும் 0-60 வரையிலான இலக்க வரிசையும் இந்த நாகரிகத்தில் உருவானவையே.







சயங்களில் தாட்டமானது, ஆகும். இது ஆண்டுகள் ஆண்ட ன்னரால் உருவாக் சத்தில் அழகிய காண்டு தொங் பட்டது. பெரிய ற்றின் மேல் பல ட்டங்கள் அமைக் ஸர் மன்னரின் ப் போக்கவே நிர்மாணிக்கப் ன்றது.

## கெஸிட்கள்


கி.மு. 1600 முதல் 1190 வரையிலான காலப்பகுதியில் பாபிலோனியாவை 'கெஸிட்கள்' என்பவர்கள் ஆட்சி செய்தனர். செதுக்கல் வேலைப்பாடுகளுடன் கூடிய தேச எல்லைக் கற்களை ஊன்றி எல்லையை அடையாளப் படுத்தியமையால் அவர்கள் பிரசித்தி பெற்றனர்.

## சுமேரியர்கள்

கி.மு. 4000 ஆண்டிற்கும் கி.மு. 3000 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் வடக்கில் இருந்து இங்கு வந்த மக்கள் குடியினரே 'சுமேரியர்கள்' என அழைக்கப்பட்டனர். அவர்கள் சிறந்த விவசாயிகளாகவும் கலைஞர்களாகவும் இருந்ததோடு மிகவும் புரிந்துணர்வுடன் செயற்பட்டனர். மன்னர்களின் வழிகாட்டலின்கீழ் அணைக்கட்டுகள், கால்வாய் வெட்டுதல், மற்றும் நீர்த்தேக்கங்களையும் அமைத்தனர்.

## சமயம்

தெய்வங்கள், மக்களின் வாழ்க்கையில் அனைத்து விடயங்களிலும் தொடர்புபட்டவர்கள் என மொசபொத்தேமிய மக்கள் நம்பினர். தெய்வங்களில் வானிற்கு அதிபதியாகிய 'அனு' கடவுளே முக்கிய இடத்தைப் பெற்றார். 'இஸ்தார்' எனும் தெய்வம் அன்பிற்கும் யுத்தத்திற்கும் அதிபதியாகவும் 'ஏஆ' எனும் தெய்வம் அறிவுக்கூர்மைக்கும் நீருக்கும் அதிபதியாகத் திகழும் தெய்வமாகவும் கருதப்பட்டது.



- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழ்

பெயர்: ................................................

**01) கீழ் காணும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

சுப்பிரமணிய பாரதியார் சிறந்த தமிழ்ப் புலவர். அவர் கலை நிறைந்த சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். அவருடைய பாடல்களைச் சிறுவர்கள் மட்டுமன்றி, பெரியவர்களும் விரும்பிப் படிக்கின்றார்கள். இவர் இளமையில் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி ஆகிய மொழிகளை கற்றிருந்தார். எனினும், இவர் தமிழிலேயே அதிக பற்றுக் கொண்டவராக இருந்தார். உண்மையே பேச வேண்டும்; பொய் பேசுவது பெரிய பாவம் என கருதினார்.

01. பந்தியில் கூறப்பட்டுள்ள புலவர் யார்?
   ..........................................................
02. இவர் எந்தெந்த மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்?
   ..........................................................
03. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெயர் அடைமொழி யாது?
   ..........................................................
04. புலவர் எதைப் பாவம் எனக் கருதுகிறார்?
   ..........................................................
05. இவர் எந்த மொழியில் அதிக பற்றுக் கொண்டிருந்தார்?
   ..........................................................
06. இப்பந்தியில் கூறப்படும் சிறந்த கருத்து யாது?
   ..........................................................
07. இங்கு குறிப்பிட்டுள்ள பொதுப்பாற் சொல் யாது?
   ..........................................................
08. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொல் தருக.
   1. புலவர் : ..........................................
   2. மெய் : ..........................................

**02) பாடலை வாசித்து இங்குள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

தெருவைச் சுத்தம் செய்கிறாய்
சிறந்த தொண்டு ஆற்றுகிறாய்
சின்னஞ் சிறு குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத் தாயும் நீ ஆனாய்

01. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பறவை எது?
   1. காகம் 2. குயில் 3. சேவல்
02. இப்பறவை எதற்கு வளர்ப்புத் தாயாகிறது?
   1. காகம் 2. குயில் குஞ்சு 3. மயில் குஞ்சு
03. 'தொண்டன்' என்ற சொல்லுக்கு ஒத்த சொல் யாது?
   1. நண்பன் 2. பாவலன் 3. சேவகன்

**03) பின்வரும் கூற்றுக்கு சரியான விடையைத் தெரிக.**

01. உடலை வருத்தி வியர்வை சிந்தி உணவை உற்பத்தி செய்பவன்;
   1. விவசாயி 2. மீனவன் 3.தொழிலாளி
02. கட்டுவலையுடன் இரவு வேளைகளில் நீரில் உழைப்பவன்;
   1. விவசாயி 2. மீனவன் 3. பாகன்
03. கண்ணால் கண்டதை வடிவமைப்பவன்;
   1. சிற்பி 2. ஓவியன் 3. புலவன்

**04) சரியான விடையை தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. பின்வருவனவற்றுள் பெயரெச்சம் யாது?
   1. அமுது 2. ஓடிய 3. விழுந்து
02. பெரிய மரத்தில் மாங்கனிகள் குலையாகக் காய்த்தன. இதில் எழுவாய் எது?
   1. பெரிய 2. மரம் 3. மாங்கனிகள்
03. மிருகங்கள் காடுகளில் ......................... திரிந்தன.
   (அழைந்து, அலைந்து, அளைந்து)
04. 'பல்லினம்' என்பதை பிரித்தெழுதினால்;
   1. பல்+இனம் 2. பல்+லினம் 3. பல+இனம்
05. வேர்வை என்ற சொல்லின் சரியான வடிவம்;
   1. வியர்வை 2. வேற்வை 3. வியற்வை
06. '..................... அறியாமல் காலை விடாதே'
   1. ஆளம் 2. அகலம் 3. ஆழம்
07. 'கண் ......................... பின் சூரிய நமஸ்காரம்'
   1. வளர்ந்த 2. மறைந்த 3. கெட்ட
08. 'பறவைகள்' என்பதன் ஒத்த வடிவம் யாது?
   1. பட்சி 2. பறவை 3. பட்சிகள்
09. 'தந்தை தாய் பேண்' இங்கு 'பேண்' என்பதன் பொருள்;
   1. கடமை 2. பாதுகாத்தல் 3. உதவுதல்

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## சுற்றாடல்

(ஜனவரி 25 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 05. | 2 | 09. | 2 | 13. | 3 | 17. | 3 |
| 02. | 2 | 06. | 2 | 10. | 1 | 14. | 3 | 18. | 1 |
| 03. | 2 | 07. | 1 | 11. | 3 | 15. | 2 | 19. | 3 |
| 04. | 1 | 08. | 1 | 12. | 3 | 16. | 2 | 20. | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்களை விட மோப்ப சக்தியை அதிகம் கொண்ட யானைகள்







உலகில் வாழும் யானைகளின் தும்பிக்கைகள் நீளமானவை என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். இந்த தும்பிக்கைகள் மூலம், அதிகமாக பொருட்களையும் உயிரினங்களையும் யானைகள் நுகர்ந்து பார்க்கின்றன. குறிப்பாக, யானைகளில் ஆபிரிக்க யானைகளே, மோப்பத் திறனைக் கூடுதலாகக் கொண்டவை என விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நாய்களும் அதிக மோப்பத் திறன் கொண்டவை அதனால்தான் அவற்றை துப்பறியும் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். எனினும், தற்போது, நாய்களை விட, கூடுதலான மோப்பத் திறனைக் கொண்டவையாக யானைகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, நடத்தப்பட்ட மேலதிக ஆய்வுகளில் மனிதர்கள் மிகவும் மோசமான மோப்பத் திறனைக் கொண்டவர்கள் என்பது அறியப்பட்டுள்ளது.

ஆபிரிக்க யானைகள் பல மைல் தொலைவில் காணப்படும் நீர் நிலைகளை அவற்றின் மோப்பத் திறனைக் கொண்டு அறிந்து கொள்வதாக ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, யானைகள் தமக்கான உணவுகளையும் ஏனைய தேவைகளையும் தமது மோப்ப சக்தியைக் கொண்டு கண்டுபிடித்து விடுகிறதாம். ஆபிரிக்க யானைகளுக்கு மோப்பம் பிடிக்கக்கூடிய தன்மையைத் தூண்டும் 2,000 இற்கும் அதிகமான மரபணுக்கள் அதன் உடலில் காணப்படுவதே, இதற்கான காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

# புகழ்பெற்ற ஜனநாயக வசனம்



“மக்களால் மக்களுக்கான மக்களின் அரசு” (The government of the people by the people for the people) என்ற ஜனநாயகத்தின் புகழ்பெற்ற வாசகத்தை கூறியவர் ஆபிரகாம் லிங்கன் ஆவார். இதனை ஐக்கிய அமெரிக்காவில் உள்நாட்டுப் போரில் உயிர் நீத்த படைவீரர்களுக்கான நினைவிடத்தை 1863 ஆம் ஆண்டு திறந்து வைத்தபோது, ஆபிரகாம் லிங்கன் ஆற்றிய 4நிமிட உரையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று இதயங்கள் கொண்ட கடல் உயிரினம்



கடல் உயிரினங்களின் ‘ராஜா’ என கருதப்படும் உயிரினமான கணவாய்களுக்கு மூன்று இதயங்கள் உள்ளது. இது ஸ்குவிட் மற்றும் ஆக்டோபஸ் குடும்பத்தை சார்ந்ததாகும். அவற்றில் ஒரு இதயம் மிகப் பெரிதாக உள்ளதோடு, ஏனைய இதயங்களில் இரண்டாவது இதயம் சுவாச உறுப்புக்கு குருதியைப் பாய்ச்சவும், மூன்றாவது இதயம் பிற உறுப்புகளுக்கு குருதியைப் பாய்ச்சவும் பயன்படுகிறது.

# கேள்விக்கென்ன பதில்...?

## பரிசுப் போட்டி

### போட்டி விபரம்

ஒவ்வொரு வாரமும் 5 பொது அறிவுக் கேள்விகள் வீதம் அடுத்தடுத்த எட்டு வாரங்களில் மொத்தமாக 40 கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும் கேள்விகளை சேகரித்து மொத்தமுள்ள 40 கேள்விகளுக்குமான விடைகளை ஒன்றாக ஒரே கடித உறையினுள் வைத்து அனுப்ப வேண்டும்.

### பரிசு விபரம்

அதிகப்படியான சரியான விடைகளை எழுதுவோரில் 25 பேர் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா 3000 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரண வவுச்சர்கள் வழங்கப்படும்.

**பாடசாலை உபகரண வவுச்சர்களை வெல்லுங்கள்**




**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

போட்டியின் இறுதிக் கட்டத்தில் அறிவிக்கப்படும்.

**இவ்வார கேள்விக் கூப்பன்**

**கேள்விக்கென்ன பதில்...?**

**கேள்வி** 01.02.2017


1. இலங்கையின் மிக நீளமான ஆறு எது?
   ..............................
2. உலகின் மிக பழமையான நாடாளுமன்றம் உள்ள நாடு எது?
   ..............................
3. புல்லாங்குழலில் எத்தனை துளைகள் உள்ளன?
   ..............................
4. திருப்புகழைப் பாடியவர் யார்?
   ..............................
5. சாதாரண உப்பின் இரசாயனப் பெயர் என்ன?
   ..............................

பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
வகுப்பு: ..............................
கையொப்பம் ..............................

Digitized by Noolaham Foundation.



# போகொட மரப்பாலம்



இலங்கையின் வரலாற்றில் 400 ஆண்டுகள் பழமையான மரப்பாலம் இது ஆகும். இந்த பாலம் 16ஆம் நூற்றாண்டான தம்பதெனியாக் காலத்தில் பதுளைக்குத் தெற்கே 13 கி.மீற்றர் தொலைவில் பதுளையையும் கண்டியையும் இணைக்கும் கல்லந்த ஓயாவுக்கு குறுக்கே கட்டப்பட்டது.

முழுவதும் மரப்பலகைகளால் ஆன இப்பாலத்துக்கான பலகைகள் ஒரே ரக மரத்தில் இருந்து பெறப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதன் நீளம் 15 மீற்றர், அகலம் 1.5 மீற்றர். முழுப் பாலத்திற்குமே உயரமான ஓடு வேய்ந்த கூரை அமைப்பு கண்டி ராச்சியத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பாலத்தில் இரு பக்கங்களிலும் உள்ள தடுப்புக்கள் பழங்கால முறையில் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன.






பாலம் ஒரு பெரிய அடி மரத்தினால் தாங்கப் பட்டுள்ளது. இதன் உயரம் 2.4 மீற்றர் (7.9 அடி). இவைகளை பாலத்துடன் பொருத்துவதற்கான ஆணிகள் உட்பட அனைத்துப் பகுதியுமே மரத்தால் செய்யப்பட்டவை. இந்த பாலம் பெரும்பாலும் பலா மரக் குற்றிகளால் கட்டப்பட்டுள்ளது.


இந்த பாலத்துக்கு அருகில் ஒரு பழைய கோயிலும் உள்ளது. இக்கோயில் பாலத்தைவிடக் காலத்தால் முற்பட்டது. இந்த கோயில் கி.மு முதலாம் நூற்றாண்டின் மன்னனான வலகம்பாவின் கட்டளைப் படி அமைக்கப்பட்டது. இங்குள்ள பிராமி எழுத்தில் எழுதப்பட்ட கல்வெட்டொன்றின்படி, இக் கோயில் பதுளையின் உள்ளூர்த் தலைவரான திஸ்ஸ என்பவரால் ‘பிரம்மதத்தர்’ என்னும் மதகுருவுக்கு வழங்கப்பட்டதாகும். கோயிலின் உள்ளே கண்டி இராச்சியக் காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் பல உள்ளன. இந்த ஓவியங்கள் வரையப்பட்ட சுவர்கள் பருத்திப் பஞ்சு, தேன், சுத்தப்படுத்திய களிமண் என்பவற்றின் கலவையால் கட்டப்பட்டது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தப் படம், மரங்கள் மற்றும் மனிதர்களுக்கு இடையில் நிகழும் வாயுக்களின் பரிமாற்றத்தைக் குறிக்கின்றது. அதாவது, நாம் வெளிச் சுவாசத்தின்போது வெளியிடும் காபனீரொட்சைட் வாயுவை உள்ளெடுத்துக்கொள்ளும் மரங்கள், நாம் சுவாசிக்கத் தேவையான ஒட்சிசன் வாயுவை உற்பத்தி செய்து எமக்குத் தருகின்றன. எனவே, இத்தகைய உன்னத செயற்பாட்டை மேற்கொள்ளும் மரங்களை அழிக்காமல் பாதுகாப்போம்.


விஜய் + PLUS

சிதறியுள்ள பாகங்களை வெட்டியெடுத்து பொருத்தமான முறையில் ஒட்டுங்கள்






# நிற உணவுகளும் பயன்களும்



**சிவப்பு**
இதயத்தைப் பாதுகாக்கும், இரத்த ஆரோக்கியத்திற்கு உதவும், பார்வைத்திறனை அதிகரிக்கும், மூட்டுக்களை உறுதியாக்கும், திசுக்களின் வளர்ச்சிக்கு உதவும், சருமம் பொலிவு பெற உதவும்.

**செம்மஞ்சள்**
புற்றுநோயைத் தடுக்கும், சரும ஆரோக்கியத்திற்கு உதவுகின்ற புரதத்தை அதிகரிக்கும், பார்வைத் திறனை அதிகரிக்கும், சருமம் பொலிவு பெற உதவும்.

**மஞ்சள்**
இதய ஆரோக்கியம் தரும், சிறந்த பார்வைத் திறன், உணவு செரிமானத்திற்கு உதவும், நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கும்.





**பச்சை**
எலும்புகளின் உறுதி, புற்றுநோயைத் தடுக்கும், நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கும், உயர் குருதி அழுத்தம் மற்றும் நீரிழிவைக் கட்டுப்படுத்தும், மலச் சிக்கலைத் தடுக்கும்.

**நீலம், ஊதா**
கனிம உறிஞ்சுதலுக்கு உதவும், திசுக்கள் சிதைவடையாமல் பாதுகாக்கும்.

**வெள்ளை**
புற்றுநோயைத் தடுக்கும், தேவையற்ற கொழுப்பைக் கரைக்கும், உடல் நச்சுக்களை வெளியேற்றும், உயர் குருதி அழுத்தத்தை கட்டுப்படுத்தும், தொற்றுநோய்களை எதிர்க்கும்.



- நுஸ்ஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜூலியா, சித்திரம் வரைவதில் ஆர்வம் கொண்டவள். அவள் அழகான பூங்கொத்தொன்றை வரைந்தாள்.

டேவிட், சித்திரம் வரைவதில் ஆர்வம் கொண்டவன். அவன் அழகான வீடொன்றை வரைந்தான்.



1. டேவிட் அழகான ................................ வரைந்தான்.
2. ஜூலியா அழகான ............................... வரைந்தாள்.
3. டேவிட்டும் ஜூலியாவும் ...................................... ஆர்வம் கொண்டவர்கள்.








**1. நீரோடையில் நீந்திக்கொண்டிருப்பவை;**

1. தாய்க்கோழியும் குஞ்சுகளும்
2. தாய் வாத்தும் குஞ்சுகளும்
3. பறவைகளும் குஞ்சுகளும்

**2. அவற்றுக்கு மேலாகப் பறந்துகொண்டிருப்பவை யாவை?**

1. வாத்துகள் 2. பூக்கள் 3. குருவிகள்

**3. புற்தரையில் அமர்ந்திருப்பது எது?**

1. பாம்பு 2. நத்தை 3. தவளை

**4. நீரோடையின் இரு கரைப்பகுதிகளிலும் பச்சைப் பசேலென ............................... வளர்ந்துள்ளன.**

1. புற்களும் புதர்களும் 2. பூக்கள்
3. வானுயர்ந்த மரங்கள்

**1. இங்கு காணப்படும் பொருட்களில் பெரும்பாலானவை ............................... செய்யப்பட்டுள்ளன.**

1. இரும்பினால் 2. கண்ணாடியினால்
3. மரப்பலகையினால்

**2. இங்கிருப்பவற்றில் மேசைக்குத் தேவையான தளபாடம் எது?**

.......................................................................

**3. ஆடைகள் வைக்கப் பயன்படுவது எது?**

.......................................................................


**4. படுக்கையறையில் இருக்கக்கூடியவை எவை?**

.......................................................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 225




### மேலிருந்து கீழ்

01. சிறந்த அறிவுள்ளவர்.
02. ஓர் இலக்கம்.
03. உலகப் புகழ் பெற்ற செயற்கை கால்வாய் ஒன்று.
04. நடு. (தலைகீழ்)
05. கறுப்பு- எதிர்ப்பதம்.
07. அடையாளம்.
08. ஏழ்மை. (தலைகீழ்)
09. முதுமை - எதிர்ப்பதம். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


01. நினைவு.
03. தானிய வகையொன்று. (குழம்பியுள்ளது)
04. பேசும் ஆற்றலுள்ள பறவை.
05. ஒன்றுமில்லாத நிலை.
06. அசுத்தம்.
08. சிறிய தோணி. (குழம்பியுள்ளது)
10. இது கத்தும்.

**குறுக்கெழுத்துப் போட்டி: 224 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | ன் | டி | 2 மா | தே | 3 வி |
| த | | 4 ஆ | வி | | ரோ |
| 5 யா | னை | | லை | வி | 6 த |
| த் | | 7 மே | | | ம் |
| தி | | ம் | | | |
| ரை | ந | ள | 8 இ | | 9 ஈ |

## வழி காட்டுங்கள்

இந்த கார்களில் ஒன்றுதான் எரிபொருள் நிரப்பு நிலையம் செல்கின்றது. அதற்கு வழி காட்டுங்கள்



## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை அமையுங்கள்



மு க ல் ரு இ


கு மூ க்

தி சா வை த் ய லை

ய் து வா


டா ப ணி ட்

## வெற்றிடத்தில் வர வேண்டியது எது?







### படத்திற்குப் பொருத்தமான சொல்லில் ✓ அடையாளமிடுக




### அறிவுக்கு விருந்து (18.01.2017) விடைகள்




★ மா, மான், மாவடு, மாடு, மாலை, மாதம், வடு, வலை, வதம், அவன், அவம், அலை, தன், தவம், தம், தடு, தலை, காலை, காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொ/இராமநாதன் கல்லூரி நடைபவனி










விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

கொழும்பு, பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியினால் நடத்தப்பட்ட நடைபவனி நிகழ்வின்போது ஏராளமான மாணவர்களும், ஆசிரியர்களும் பெற்றோரும் கலந்து கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களையே இங்கு காண்கிறீர்கள்.

(பட உதவி: ஜீவானந்தராஜா, ஷியாம்)

# உணவும் ஆரோக்கியமும்



எமது முதாதையர் முற்காலத்தில் மிகவும் ஆரோக்கியமான உணவுகளை கட்டுப்பாட்டுடன் உட்கொண்டனர். இதனால், அவர்கள் நோய்கள் இன்றி மிக ஆரோக்கியமாக வாழ்ந்தனர். தற்போது சின்னஞ் சிறு பிள்ளைகள் உட்பட, பெரியவர்கள் வரை சத்து நிறைந்த ஆரோக்கியமான உணவுகளை விடுத்து துரித உணவுகளுக்கே (Fast food) முக்கியத்துவம் கொடுக்கின்றனர். தற்காலத்தில் மனிதனின் வேகமான செயற்பாட்டிற்கு இத்தகைய உணவுகளே இலகுவானதாக காணப்பட்டாலும் இது மிகவும் தவறான உணவு நடைமுறையாகும்.

இத்தகைய உணவுகள் உடற்பருமனை அதிகரிப்பதுடன்; நீரிழிவு, இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, இருதய நோய்கள் போன்ற தொற்றாநோய்களையும் ஏற்படுத்திவிடுகின்றன. எனவே, நாம் உண்ணும் உணவு தொடர்பான விபரங்களையும் அவற்றை உண்பதால் ஏற்படும் பிரதிபலன்களையும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. அந்தவகையில், ஆரோக்கியமான உணவுகளை உண்போம்; ஆரோக்கியமாக வாழ முற்படுவோம்.

## கைவண்ணங்கள்



ரி.வஷிதன், கணேசா மகா வித்தியாலயம், கல்முனை.






ஜெ.விதுர்சிகா, கே/தெஹி/எதுராபொல தமிழ் வித்தியாலயம், புளத்கொகுபிடிய.



பி.வஷிசான், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.



எம்.முஜாஹித், மட்/அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர்.



என்.டிரோஷன், கேம்பிரிஜ் கல்லூரி, கொட்டகலை.

கே.கிருஷாந்தினி, சென் மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2016, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்




**பெயர்:** எஃப்.ஹம்தி அஹமட்.
**புள்ளிகள்:** 158.
**பாடசாலை:** மடுல்போவ முஸ்லிம் மகா வித்தி.,ஹெம்மாதகம.



**பெயர்:** எச்.மரியம்.
**புள்ளிகள்:** 157.
**பாடசாலை:** மடுல்போவ முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹெம்மாதகம.



**பெயர்:** ஆர்.ரிஷ்மா.
**புள்ளிகள்:** 155.
**பாடசாலை:** மடுல்போவ முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹெம்மாதகம.



**பெயர்:** எஃப்.நதா.
**புள்ளிகள்:** 153.
**பாடசாலை:** மடுல்போவ முஸ்லிம் மகா வித்தி., ஹெம்மாதகம.



**பெயர்:** ஏ.அத்னான் ஷெரீப்.
**புள்ளிகள்:** 181.
**பாடசாலை:** மா/உகுவெல அல்-மினா ஆரம்பப் பாடசாலை,
**பெற்றோர்:** எம்.ஆசிப்-பர்வின்.




★ உலகில் சுமார் 17,500 தொடக்கம் 20,000 வரையான வண்ணத்துப்பூச்சி வகைகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் மிகப் பெரிய இனம், பப்புவா நியூ கினியா நாட்டின் மழைக்காடுகளில் வாழும் ‘குயின் அலெக்சாண்ட்ரா’ஸ் பர்ட்விங்’ (Queen Alexandra's Birdwing) என்பதாகும்.

★ வண்ணத்துப்பூச்சிகள் மலரில் வந்தமரும்போதே, அதன் சுவையை அறிந்துவிடும். அது எப்படி என்று யோசிக்கிறீர்களா? வண்ணத்துப்பூச்சிகளின் பாதங்களில்தான் சுவை அரும்புகள் உள்ளன.



உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
விலை Rs. 10/=
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

දුව: අම්මේ! හෙට නංගි පාසල් යන මුල් දවස නේද?
அம்மே! ஹெட்ட நங்கி பாசல் யன முல் தவச நேத?
மகள்: **அம்மா! நாளை தங்கச்சி பாடசாலை செல்கின்ற முதல் நாள் அல்லவா?**

අම්මා: ඔව් දුව.
ஒவ் துவ.
அம்மா: **ஆம் மகள்.**

දුව: එයාගේ බඩු ලැහැස්තිද?
எயாகே படு லெஹெஸ்தித?
மகள்: **அவளுடைய பொருட்கள் ஆயத்தமா?**

අම්මා: ඔව් දුව. මම ඔක්කොම ලැහැස්ති කළා.
ஒவ் துவ. மம ஒக்கொம லெஹெஸ்தி களா.
அம்மா: **ஆம் மகள். நான் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தினேன்.**

දුව: අම්මේ, ප්‍රින්සිපල්ටයි ටීචර්ටයි දෙන්න බුලත් ගත්තද?
அம்மே, ப்ரின்சிபல்ட்டய் டீச்சர்ட்டய் தென்ன புலத் கத்தத?
மகள்: **அம்மா, அதிபருக்கும் டீச்சருக்கும் கொடுப்பதற்கு வெற்றிலை எடுத்தீர்களா?**

අම්මා: අනේ දුව.. මම බුලත් ගත්තේ නැහැනේ.
அனே துவ... மம புலத் கத்தே நெஹெனே.
அம்மா: **ஐயோ மகள்... நான் வெற்றிலை எடுக்கவில்லையே.**

දුව: එහෙනම් තාත්තා එනකොට ගේන්න කියන්න.
எஹெனம் தாத்தா எனகொட்ட கேன்ன கியன்ன.
மகள்: **அப்படியானால் அப்பா வரும்போது வாங்கி வரச் சொல்லுங்கள்.**

: අම්මේ, හෙට කිරිබත් හදනවාද?
அம்மே, ஹெட்ட கிரிபத் ஹதனவாத?
: **அம்மா, நாளை பாற்சோறு சமைப்பீர்களா?**

අම්මා: ඔව් දුව. මම උදේම කිරිබත් හදනවා.
ஒவ் துவ. மம உதேம கிரிபத் ஹதனவா.
அம்மா: **ஆம் மகள். நான் காலையிலேயே பாற்சோறு சமைப்பேன்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. පාසල් යන මුල් ..........
2. එයාගේ .......... ලැහැස්තිද?
3. .......... ගත්තේ නැහැනේ.




**'Will be' எனும் எதிர்கால துணை வினைச்சொல்**
**The future tense Auxiliary verb 'Will be'**

**இதுவரையிலும், 'Am' எனும் நிகழ்கால துணை வினைச்சொல் மற்றும் 'Was' எனும் இறந்தகால துணை வினைச்சொல் என்பவற்றைத் தனித் தனியாகக் கையாண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களைப் பயின்றோம் அல்லவா? இனி, இவற்றை எதிர்கால வாக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பயில்வோம்.**

அ) I am in school now.
நான் இப்பொழுது பாடசாலையில் இருக்கிறேன்.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present simple tense)

ஆ) I was in the shop yesterday.
நான் நேற்றுக் கடையில் இருந்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

இ) I will be at home tomorrow.
நான் நாளை வீட்டில் இருப்பேன்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ **மேற்காணும் வாக்கியங்களின்படி:**

அ) I am (Present tense)
நான் இருக்கிறேன். (நிகழ்காலம்)

ஆ) I was (Past tense)
நான் இருந்தேன். (இறந்தகாலம்)

இ) I will be. (Future tense)
நான் இருப்பேன். (எதிர்காலம்)

**குறிப்பு: Be - இருங்கள்- (ஏவல் வினை)**

★ ★ ★ ★

ஈ) I am in Colombo today.
நான் இன்று கொழும்பில் இருக்கிறேன்.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present simple tense)

உ) I was in Kandy yesterday.
நான் நேற்றுக் கண்டியில் இருந்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஊ) I will be in Jaffna tomorrow.
நான் நாளை யாழ்ப்பாணத்தில் இருப்பேன்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய பதிவுகள்





இலங்கை தனது 69 ஆவது சுதந்திர தினத்தை எதிர்வரும் 04 ஆம் திகதி கொண்டாடவுள்ளது. அதையொட்டிய சிறப்புக் கட்டுரை.



பல்வேறு மன்னர்களால் ஆளப்பட்டு வந்த இலங்கையில் 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் எனும் ஐரோப்பிய இனத்தவர்களின் வருகையால் பாரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டது. அதில் கோட்டை அரசில் தலையிட்ட போர்த்துக்கேயர் உள்நாட்டில் நிலவிய ஒற்றுமையின் மையைப் பயன்படுத்தி இலங்கையின் முழு கரையோரப் பிரதேசங்களையும் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தனர். அதனைத் தொடர்ந்து 1658 ஆம் ஆண்டு முதல் ஒல்லாந்தரும் 1796 ஆம் ஆண்டில் ஆங்கிலேயரும் இலங்கை கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றி ஆண்டனர். 1815 ஆம் ஆண்டில் சுதந்திர அரசாக இருந்த கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றிய ஆங்கிலேயர் அன்று முதல் முழு இலங்கையையும் ஆளத் தொடங்கினர்.

ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் இந்நாட்டின் மக்களின் பாரம்பரிய கலை கலாசாரத்திற்கும் பொருளாதார, சமூக உரிமைகளுக்கும் பாரிய பிரச்சினைகள் தோன்றின. இவற்றில் இருந்து விடுதலை அடைய வேண்டும் என்ற உணர்வு அனைத்து இலங்கையருக்கும் ஏற்பட்டது. அதனால், இந்நாட்டில் வாழ்ந்த மூவின மக்களும் எவ்வித வேறுபாடுமின்றி இலங்கையர் என்ற ஒரே உணர்வுடன் போராடியே இச்சுதந்திரத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் அதிருப்தி

1818 ஆம் ஆண்டிலேயே, ஆங்கிலேயருக்கு எதிரான முதலாவது கிளர்ச்சி ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 1848 ஆம் ஆண்டில் விவசாயிகளின் கிளர்ச்சியும் 1878 ஆம் ஆண்டில் ஊவா வெல்லஸ்ஸ கலகமும் முக்கியமானவை ஆகும். இதன் வழியாக மக்களின் அதிருப்தி நாளுக்கு நாள் ஆங்கிலேயருக்கு எதிராக அதிகரித்துச் சென்றது.

## படித்தோர் குழாம்

19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் படித்த இலங்கையரின் தொகை அதிகரித்தது. இவர்களில் அநேகர் ஆங்கில மொழிமூலம் கற்றாலும் தமக்கிழைக்கப்படும் அநீதிகளை நன்குணர்ந்தமையால் ஆட்சி அதிகாரம் கேட்டுப் போராடினர்.

## அரசியலமைப்பின் படிமுறை வளர்ச்சி

1818 ஆம் ஆண்டில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு போராட்டங்களின் விளைவாக காலத்திற்கு காலம் அரசியல் சீர்த்திருத்தங்களை ஆங்கிலேயர் மேற்கொண்டனர்.

**★ கோல்புறூக்-கமரன் சீர்த்திருத்தம் 1833**

இதன்மூலம் இராஜகாரிய முறை நீக்கப்பட்டதோடு, இலங்கையர் உள்ளிட்ட 15 பேரைக் கொண்ட சட்டவாக்கக் கழகம் உருவாக்கப்பட்டது.

**★ 1931 டொனமூர் யாப்பு**

இலங்கையின் சுதந்திரத்தை நோக்கிய படிமுறை வளர்ச்சியில் டொனமூர் யாப்பு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். சர்வஜன வாக்குரிமை, பிரதேசவாரி பிரதிநிதித்துவம், அரச கழகம், நிர்வாகக் குழு முறை இவற்றில் முக்கியமானதாகும்.

**★ 1947 சோல்பரி யாப்பு**

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்குவதற்காக சோல்பரி யாப்பு உருவாக்கப்பட்டது.

## மூவின மக்களின் பங்களிப்பு

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் சேர்ந்த தலைவர்கள் மூவின மக்களையும் ஒன்றிணைத்தே போராடினர். இதில் டீ.எஸ்.சேனநாயக்க, அநகாரிக தர்மபால, டி.ஆர். விஜயவர்தன, சேர்.பொன்.அருணாச்சலம், சேர் பொன் இராமநாதன், ஆறுமுக நாவலர், அறிஞர் சித்திலெப்பை, டி.பி.ஜாயா போன்ற தமிழ் மற்றும் இஸ்லாமிய தலைவர்கள் பலரும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந்நாட்டிற்கு வழங்கியுள்ளனர்.



## சுதந்திரப் பிரகடனம்

1818 ஆம் ஆண்டு தொடங்கி 1948 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ஏற்பட்ட போராட்டங்களின் விளைவாக 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி பிரித்தானிய அரசு இலங்கையின் சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திட்டது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயற்கையான சூழலில் அமைந்துள்ள, வருடம் முழுவதும் நீரினால் மூழ்கியுள்ள அல்லது காலத்துக்கு காலம் நீரினால் மூழ்கும் பிரதேசங்கள் 'ஈரநிலங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. அதாவது, தரை மட்டத்திலிருந்து 6 மீற்றருக்குக் குறைவான கடல்சார் பகுதிகள் உட்பட, ஓடுகின்ற அல்லது ஓடாமல் இருக்கின்ற நன்னீர், உவர்நீர் அல்லது சவர்நீர் என ஏதாவதொன்றினால் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மூழ்கியுள்ள இயற்கையான அல்லது செயற்கையான பகுதிகள் ஈரநிலங்களாகக் கொள்ளப்படுகின்றன. சதுப்பு நிலங்கள், நீர்ப்பாதைகள், ஏரிகள் மற்றும் ஆறுகள் போன்ற நீர்நிலைகள், களப்புகள், கழிமுகங்கள், கடற்கரைசார் சதுப்பு நிலங்கள், வயல்வெளிகள், உள்ளக நீர்த்தேக்கங்கள், ஆற்றுவாய் என்பன ஈரநிலங்களுக்கு உரிய பகுதிகளாகும்.



## ரம்சார் உடன்படிக்கை

1971 ஆம் ஆண்டு ஈரானின் ரம்சார் நகரில் சர்வதேச உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. ஈரநிலங்களைப் பாதுகாத்துக் கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையே 'ரம்சார் உடன்படிக்கை' என்று அழைக்கப்படுகின்றது.

## உயிர்ப்பல்வகைமை நிறைந்த ஈரநிலங்கள்

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காணமுடியும். அங்கு நிரந்தரமாக வசிக்கும் உயிரினங்களுக்கும் தற்காலிகமாக வசிக்கும் உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணின் ஈரலிப்பைப் பாதுகாக்கக்கூடிய தாவர இனங்களும் இவற்றில் அடங்கும். நன்னீரிலும் களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈரூடகவாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்குரியவையாகும். சுற்றுலாப் பறவைகளுக்கான தற்காலிக இருப்பிடமாக ஈரநிலங்கள் உள்ளன.

# ஈரநிலங்களி

## ஈரநிலங்களால் கிடைக்கும் நன்

**★ மருந்துகள்**

உள்நாட்டு வைத்திய முறையில் மருந்துகள் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படுகின்ற பெரும்பாலான தாவரங்கள் ஈரநில தாவரங்களாகும். தாமரை, கீகிரிந்திய, லுணுவில, கந்துரு, நீல அல்லி, நீர்முள்ளி போன்றவை இதற்கான சில உதாரணங்களாகும்.

**★ சுவையூட்டி**

உணவுக்கு சுவையூட்டும் உப்பு விளைவிக்கப்படும்



உப்பளங்களும் ஈரநிலத்தில் அடங்குகின்றன.

**★ விறகு மற்றும் எரிபொருள்**

சில கண்டல் தாவரங்கள் விறகாகவும் பயன்படுத்தப் படுகின்றன. நீர்வாழ் தாவரங்களின் உக்கிப்போன கழிவுகளிலிருந்து எரிபொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மிக நீண்டகாலம் தேங்கியிருக்கும் கழிவுகள் நிலக்கரியாக மாறுகின்றன.

**★ நிர்மாணப் பொருட்கள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள்**

சில கண்டல் தாவர இனங்களில் இருந்து வீட்டு நிர்மாணத்திற்கான பலகைகள் பெறப்படுகின்றன. அம்பலாங்கொடை, ஹிக்கடுவ பகுதிகளில் பிரதான கைத்தொழில் துறையாகத் திகழும் முகமூடிகள் தயாரிப்புக்கு சில ஈரநில தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஈரநிலத்தில் இருந்து பெறப்படும் புற்கள், பாய் பின்னவு, கூடைகள் பின்னவும் பயன்படுத்தப்படுகின்றன. ஈரநிலத்தில் தங்கும் களிமண் மற்றும் வண்டல் மண்ணிலிருந்து கூரை ஓடுகள், மட்பாண்டங்கள்,

## உலக ஈரநில தினம்

ரம்சார் உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்கு சர்வதேச பிரஜைகளின் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும். [illegible] 1997 ஆம் ஆண்டு 'உலக ஈரநில தினம்' பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 2 ஆம் திகதியில் உலக ஈரநில தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி 02 - உலக ஈரநில தினம்



★ **உணவுகள், இருப்பிடம், பாதுகாப்பு**

ஈரநிலப்பகுதிகளிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உயிரினங்களுக்குத் தேவையான உணவுகள் அதிகம் உள்ளன. நெற்பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படும் வயல்வெளிகளும் ஈரநிலங்களாகும். கீரை வகைகள், சில மரக்கறி வகைகளும் ஈரநிலங்களிலேயே வளர்கின்றன. ஈரநிலப் பகுதிகளில் வளர்கின்ற கண்டல் தாவரங்களில் ஒன்றான கிண்ணை (கிரலக்கா) மற்றும் ஈரநிலங்களை அண்மித்து வளர்கின்ற காட்டு மாமரம், பெருநாவல் மரம், விளா மரம், ஈச்ச மரம் போன்றவற்றிலிருந்து பெறப்படும் பழங்கள் சுவைமிக்கவையாகும்.

அத்துடன், எமது புரதத் தேவைகளை நிறைவேற்றும் மீன்கள், நண்டுகள், இறால்கள் போன்ற நீர்வாழ் உணவுகளும் ஈரநிலத்தில் இருந்தே கிடைக்கின்றன. ஈரநிலப்பகுதியானது, அங்கு வாழும் பெரும்பாலான விலங்குகளுக்குப் பாதுகாப்பான இடமாகவும் அமைந்துள்ளது. ஈரூடகவாழிகள், பூச்சி இனங்கள், பாலூட்டிகள், பறவைகள் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்களுக்கு ஈரநிலங்கள் மிகச் சிறந்த இருப்பிடமாகத் திகழ்கின்றன.

# ன் முக்கியத்துவம்



## மைகள் சில...

செங்கற்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.

★ **மேற்கொள்ளப்படும் தொழில்கள்**

ஈரநிலங்களை சார்ந்ததாக மேற்கொள்ளப்படுகின்ற மீன்பிடி தொழிற்துறை, விவசாயம்,இறால் பண்ணை, படகு சேவை போன்ற தொழிற்



துறைகள் லட்சக்கணக்கான மக்களின் ஜீவனோ பாயமாக விளங்குகின்றன.

★ **குடிநீர் மற்றும் நீர்ப்பாசன தேவைகள்**

ஆறுகள், குளங்கள், வாவிகள், ஏரிகள் போன்ற ஈரநிலங்களில் இருந்தே அருந்துவதற்கான நீர் மற்றும் விவசாயம், வீட்டுப் பயன்பாடுகள் போன்ற அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய நீர் பெறப்படுகின்றது.

★ **நீரையும் காற்றையும் சுத்தப்படுத்தல்**

ஈரநிலத்தில் வளரும் தாவரங்கள் நீரையும் காற்றினையும் சுத்தப்படுத்த உதவுகின்றன. ஈரநிலங்களில் வளரும் ஆக்கிரமிப்புத் தாவரமான ஆகாயத்



தாமரை, நீரிலும் காற்றிலும் உள்ள நச்சுக்களை உறிஞ்சிக் கொள்ளும் தன்மை கொண்டதாகும். மேலும், கரையோரப் பகுதிகளில் வளரும் தாவரங்களின் வேர்களினாலும் இவ்வாறான தொழிற்பாடுகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

★ **மண்ணரிப்பு மற்றும் வெள்ளப்பெருக்கு கட்டுப்படுத்துதல்**

ஈரநில சதுப்பு நிலங்கள் நீரைப் பெருமளவு உறிஞ்சி வைத்துக்கொள்கின்றன. இதன்மூலம் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கக்கூடியதாக உள்ளது. இங்கு வளரும் தாவரங்களும் வெள்ளப் பெருக்கினைக் கட்டுப்படுத்துகின்றன. கரையோரத்தில் நிலவும் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துவதில் கண்டல் தாவரங்கள், பங்களிப்புச் செய்கின்றன.

★ **சுற்றுலாத் தொழிற்துறை**

ஈரநிலங்களில் நிலவும் உயிர்ப்பல்வகைமைத்துவம் மற்றும் அழகிய சூழல் போன்றவற்றைக் கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். படகுச் சவாரி, நீச்சல் அடித்தல், பவளப்பாறைகளைக் கண்டுகளித்தல், பறவைகள் அவதானிப்பு என்பன ஈரநிலம் சார்ந்த சுற்றுலாத்துறையினை ஊக்குவிக்கின்றன.



## ஈரநிலங்களைப் பாதுகாப்போம்

நாட்டுக்கு அழகையும் வளத்தையும் அள்ளி வழங்கும் ஈரநிலங்கள் தற்காலத்தில் பாரியளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இயற்கையின் சமநிலையை பேணுவதற்கு ஈரநிலங்களைப் பாதுகாப்பது அவசியமாகும். ஈரநிலங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதனூடாக, ஈரநிலங்களைப் பாதுகாக்க முடியும். கண்டல் காடுகளைப் பாதுகாத்தல், திட்டமிட்ட வகையில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல், நீர்நிலைகளில் கழிவுகளைக் கொட்டுவதனைத் தவிர்த்தல், சட்ட விரோதமான முறையில் பவளப்பாறைகள் மற்றும் மணல் அகழப்படுவதை தவிர்த்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினூடாக ஈரநிலங்களைப் பாதுகாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிறருக்கு தொந்தரவின்றி உரையாட உதவும் சாதனம்







அலுவலகத்தில் கடமையாற்றும்போது பிற பணியாளர்களுக்கு தொந்தரவு ஏற்படாத விதத்தில் தமது கையடக் கத்தொலைபேசி உரையா டல்களை மேற்கொள் ளும் வகையிலான புதிய சாதனமொன்று அறிமுக மாகியுள்ளது. இந்த சாதனத்திற்கு 'ஹஷ்மி' (Hushme) என பெயரிடப் பட்டுள்ளது.


அண்மையில் அமெரிக் காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற இலத் திரனியல் தொழில்நுட்ப கண்காட்சியின்போதே, இந்த சாதனம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட் டது. யுக்ரேன் பொறி யியலாளர்கள் குழு வொன்றே இதனை தயாரித்துள்ளது. இது, கழுத்தைச் சுற்றி அணிந்து கொள்ளக்கூடிய வயர்லெஸ் ஹெட்ஃபோன் ஆகும். இந்த சாதனத்தைப் பயன்படுத்துவதன்மூலம் உங்கள் தொலைபேசி உரையாடல்களை பிறருக்கு தொந்தரவு ஏற்படாத வகையிலும் பிறருக்குக் கேட்காத வகையிலும் மேற்கொள்ளக்கூடிய தாக இருக்கும்.




நீங்கள் கையடக்கத் தொலைபேசி உரையாடல் களை மேற்கொள் ளும்போது, உங்கள் கழுத்தைச் சுற்றி இந்த சாத னத்தை அணிந்துகொள்ள வேண்டும். பின்னர், உங்களின் கையடக்கத் தொலைபேசியை இதனுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது நீங்கள் எந்தளவு குரல் எழுப்பிப் பேசினாலும் அது சிறிதளவுகூட வெளியே கேட்காது. இந்த நவீன ரக சாதனத்தை 200 அமெரிக்கன் டொலருக்கு வர்த்தக சந்தையில் அறிமுகப்படுத்த எண்ணி யிருப்பதாக இதன் தயாரிப்பாளர்கள் கூறியுள்ளனர். (-அ)









# அணுக்கள் நடிக்கும் உலகின் மிகச் சிறிய திரைப்படம்

திரைப்படங்களில் புது முறையினைக் கையாண்டு புதிய படைப்பொன்றை வழங்க விஞ்ஞானிகளால் முடிந்துள்ளது. உலகின் மிகவும் சிறிய திரைப்படத்தை தயாரித்தே அவர்கள் இந்த சாதனை யைப் படைத்துள்ளனர். அணுக்களின் நீளத்தினையும் அகலத்தினையும் வைத்தே இதனை அளவிட வேண்டும் என்று கூறும் அளவுக்கு இந்தத் திரைப்படம் மிகவும் சிறியதாகும். நெனோமீற்றர்களில்தான் இது அளக்கப்படுகின்றது.

கலிஃபோனியாவின் சென் ஜோஸ் பகுதியில் அமைந்துள்ள IBM நிறுவனத்திற்குரிய ஆய்வுகூடமொன்றிலுள்ள ஊடுருவிச் சோதிக் கும் நுணுக்குக்காட்டியைப் பயன்படுத்தியே இந்தத் திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

## ஒரு நிமிட திரைப்படம்

இத்திரைப்படத்தில் அணுக்களும் மூலக்கூறு களுமே நடிக்கின்றன. ஒரு நிமிடம் மட்டுமே நீடிக்கும் இத்திரைப்படத்திற்கு 'ஒரு சிறுவனும் அவனின் அணுவும்' (A Boy and His Atom) என்று பெயரிடப்பட்டுள்ளது. காபன் மொனொக்சைட் மூலக்கூறுகள் திரும்பத் திரும்ப மாற்றிய மைக்கப்பட்டு அவற்றை அசையச் செய்து, தனிப்பட்ட சட்டங்களில் சேகரித்து இயங்கச் செய்தே, சிறுவனொருவன் பந்து விளையாடுவ தைப் போன்ற [illegible] பட்டுள்ளது. இதனை உயிர்ப்பிக்கவென இசையும் ஒலியும் பின்னிணைப்பு செய்யப்பட்டுள்ளன.

அணுக்கள் அசையும் வீடியோ காட்சிகளை நாம் முன்பும் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கின்றோம். எனினும், இங்கு நிகழ்ந்துள்ள விசேட அம்சம் என்னவெனில், தம் விருப்பத் திற்கு ஏற்ப அணுக்களை சலனமடையச் செய்து ஒரு கதை யினைக் கூறியிருப்பதாகும். உலகில் இவ்வாறானதொரு படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது இதுவே முதன்முறை யாகும் என IBM செயற்றிட்டத்தின் பிரதான விஞ்ஞானி யான என்ட்ரியஸ் ஹெய்ன்ரிச் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜப்பானியர்களிடம் உள்ள 5 நற்பண்புகள்!

உலகில் ஜப்பானியர்கள் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் மட்டுமன்றி நற்பண்புகளிலும் உயர்வாக உள்ளனர். அவற்றை நாமும் பின்பற்றுவதால் வாழ்வில் சிறப்பான நிலையை அடையமுடியும்!

**1. பிறரின் உடைமைகளை மதித்தல்:** ஒரு பொருள் தனக்குச் சொந்தமாக இருந்தாலும் பிறருக்குச் சொந்தமானதாக இருந்தாலும் அதை ஜப்பானியர்கள் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் பேணுவர்.

**2. பொறுமையாக வரிசையில் காத்திருத்தல்:** எவ்வாறான நெருக்கடி நேரத்திலும்கூட, ஜப்பானியர்கள் வரிசையில் பொறுமையாக காத்திருக்கும் உயரிய பண்பைக் கொண்டுள்ளனர்.



**3. குறித்த நேரத்தில் வருவது:** குறிப்பிட்ட நேரத்தில் ஜப்பானியர் குறிப்பிட இடத்திற்கு செல்வார்கள். தமது தாமதத்தால் யாரேனும் பாதிக்கப்பட்டால் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க தயங்கமாட்டார்கள்.

**4. சுற்றுச் சூழல்பற்றிய உணர்வு:** குப்பைத் தொட்டியில் பல்வேறு பொருட்கள் சேர்வது பாவச் செயலாக ஜப்பானியர்கள் கருதுகின்றனர்.

**5. பொறுப்பேற்றுக் கொள்வது:** ஜப்பானியர்கள் ஒரு தவறை புரிந்துவிட்டால், அதிலும் குறிப்பாக, முக்கிய பதவியில் இருப்பவர் ஒரு பெரிய தவறைப் புரிந்துவிட்டால், அந்த தவறுக்கு பொறுப்பேற்று தன் பதவியில் இருந்து விலகத் தயங்கமாட்டார்.

# மாணவர்கள் முகநூல் (Facebook) பயன்படுத்துவது நன்மையா? தீமையா?

## கட்டுரைப் போட்டி



**முதலாவது பரிசு மடிக்கணினி (Laptop)**

**25 பேருக்கு சான்றிதழ்கள்**




மாணவர்கள் Facebook முகநூல் பயன்படுத்துவது நன்மையா? தீமையா? இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

இதனை ஒரு போட்டியாக நடத்த உத்தேசித்துள்ளோம்.

1. முகநூல் பயன்படுத்துவது நன்மையே...
2. முகநூல் பயன்படுத்துவது தீமையே

இதில் உங்களுக்கு விருப்பமான ஒரு தலைப்பில் உங்கள் கருத்தை எழுதலாம்.

**பரிசு விபரம்**

சிறந்த கருத்தை எழுதும் முதலாவது வெற்றியாளருக்கு

★ மடிக்கணினி (லெப்டொப்)
★ மேலும் 25 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்கள்

**நிபந்தனைகள்**

★ உங்கள் ஆக்கங்கள் 'புள்ஸ்கெப்' தாளில் ஒன்றரைப் பக்கத்திற்குள் அடங்குவதாக இருத்தல் வேண்டும்.

★ உங்கள் ஆக்கத்துடன், இங்கு பிரசுரமாகியுள்ள கூப்பன் இணைக்கப்படவேண்டும்.

★ உங்கள் ஆக்கங்கள் ஏற்கனவே எதிலும் பிரசுரமானதாகவோ, ஒலி-ஒளி பரப்பப்பட்டதாகவோ இருத்தல் கூடாது.

**கூப்பன்**

தலைப்பு: ..........................................

பெயர்: .................................. வயது:..........

முகவரி: ..........................................

..........................................

..........................................

தொ.பே.இல: ..........................................

பாடசாலை: ..........................................

.................................. வகுப்பு:..........

பெற்றோர் பெயர்: ..........................................

பெற்றோர் கையொப்பம் ..........................

கையொப்பம் ..........................

**போட்டி முடிவு திகதி 30.03.2017**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

கட்டுரைப் போட்டி
'விஜய்'
த.பெ.எண்.2037
கொழும்பு

# புவியை குளிரவைக்கும் எறும்புகள்




கடந்த பல ஆண்டுகளாக புவி வெப்பமடைவதால், பாரிய மாற்றங்களை புவி எதிர்கொள்கின்றது. இம்மாற்றங்கள் உலகையே அச்சுறுத்தி வருகின்றமையை நாம் பல சந்தர்ப்பங்களில் கண்டுள்ளோம். இதனை தடுப்பதற்கு பெரும்பாலான விஞ்ஞானிகள் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றார்கள். அதேநேரத்தில் அமெரிக்காவின் அரிசோனா மாநில பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஒரு விடயத்தினை கண்டுபிடித்துள்ளனர். அதாவது, நமது காலடியில் ஊர்ந்து திரியும் எறும்புகள், புவி வெப்பமடைதலை தடுத்து, புவியை குளிர வைப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். நிலத்தில் திரியும் எறும்புகள், மண்ணில் உள்ள கல்சியம், மெக்னீசியம் உள்ளிட்ட கூறுகளை சிதைப்பதனால், அவை காற்றில் கலந்துள்ள கரியமிலவாயுவை படிப்படியாக குறைகின்றது என்றும் இதன்மூலம், புவி வெப்பமடைதல் ஓரளவு குறைவதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மாளிகைக்குச் சென்ற புதிய ஜனாதிபதி

உலகின் வல்லரசாகத் திகழும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி நியமனம் ஜனவரி 20 ஆம் திகதி நடைபெற்றது. 2016 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட குடியரசுக் கட்சியின் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியிலேயே ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டு அவர் வெள்ளை மாளிகைக்குள் பிரவேசித்துள்ளார்.



## புதிய ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப்

**பிறந்த தினம்**
1946 ஜுன் 14

**முழுப்பெயர்**
டொனல்ட் ஜோன் ட்ரம்ப்

**தந்தையின் பெயர்**
ஃப்ரெட்ரிக் சீ ட்ரெம்ப்

**தாயின் பெயர்**
மேரி மெக்லியோட் ட்ரம்ப்

**பிறந்த நகரம்**
நியூயோர்க்

**ஆரம்பக் கல்வி**
நியூயோர்க் நகர இராணுவ அகடமி

**உயர் கல்வி**
பென்சில்வேனியா பல்கலைக்கழகம்

**வர்த்தகம்**
காணி வர்த்தகம், கெசினோ வியாபாரம், கோல்ஃப் மைதானம், அழகுராணிப் போட்டி மற்றும் ட்ரம்ப் பல்கலைக்கழகம்

**சொத்துக்கள்**
1.5 பில்லியன் அமெரிக்க டொலர்

ட்ரம்ப் ஐ.அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டது இதுவே முதல் தடவையாகும்.



## முன்னாள் ஜனாதிபதி பரேக் ஒபாமா 2009-2017

**பிறந்த திகதி**
1961 ஒகஸ்ட் 04

**முழுப் பெயர்**
பெரெக் ஹுசேன் ஒபாமா

**தந்தையின் பெயர்**
பெரெக் ஒபாமா சீனியர்

**தாயின் பெயர்**
சாஷா ஒபாமா

**பிறந்த ஊர்**
ஹொனலுலு - ஹவாய் தீவு

**அடிப்படைக் கல்வி**
ஹவாயில் அமைந்துள்ள சில பாடசாலைகள்


**உயர் கல்வி**
கொலம்பியா பல்கலைக்கழகம், ஹவாட் பல்கலைக்கழகம்


**தொழில்**
சட்டத்தரணி, சிவில் உரிமை குறித்த செயல்பாட்டாளர்

**குடும்பச் சொத்து**
10 மில்லியன் அமெரிக்க டொலர்

2009, 2012 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஒபாமா இரு சந்தர்ப்பங்களில் தெரிவு செய்யப்பட்டார்.













குடியரசுக் கட்சி | ஜனநாயகக் கட்சி

- முதலில் குடியேறியவர்: ஐ. அமெரிக்காவின் இரண்டாவது ஜனாதிபதியான ஜோன் அடம்ஸ் 1800 ஆம் ஆண்டில் குடியேறினார்.
- உத்தியோகபூர்வமாக 'வெள்ளை மாளிகை' என 1901 ஆம் ஆண்டு 26 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்த தியடோர் ரூஸ்வெல்ட் அவர்களால் பெயரிடப்பட்டது. கட்டப்பட்ட காலப்பகுதி - 1792-1800 நிலம் (கட்டடம்)-55,000 சதுர அடி மொத்த நிலப்பரப்பு - 18 ஏக்கர்

- அறைகள் - 132
- குளியலறைகள் - 35
- தீயணைப்பு நிலையங்கள் - 28
- உறங்கும் அறைகள் - 16
- படிக்கட்டுகள் - 08
- லிஃப்ட் - 03
- சமையலறைகள் - 03




## ட்ரம்ப் ஜனாதிபதி ஆதரவு

கடந்த நொவெம்பர் மாதம் 08 ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ஹிலரி கிளின்டன் அவர்களை தோற்கடித்து குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனல்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றார்.



**304 வாக்குகள்**
மக்கள் விருப்பு - 62,979,879 வாக்கு



**227 வாக்குகள்**
மக்கள் விருப்பு - 65,844,954 வாக்கு

## உத்தியோகபூர்வ வாகனம்/விமானம்

அமெரிக்க ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமான செயற்திறன் மிக்க வாகனங்கள் மற்றும் விமானங்கள் சில வழங்கப்படும்.



- த.பீஸ்ட்
அமெரிக்க ஜனாதிபதி மேற்கொள்ளும் பயணங்களுக்கு இந்த 'கெடிலெக் லிமோசின்' வகை மோட்டார் வாகனம் பயன்படுத்தப்படும்.

| பெறுமதி மில்லியன் டொலர் | காரின் நீளம் அடி | காரின் உயரம் அடி | நிறை தொன் | உச்ச வேகம் மணிக்கு மைல் | ஆசனங்களின் தொகை |
|---|---|---|---|---|---|
| 01+ | 18 | 05, 10' | 08 | 60 | 07 |



- த எயார் ஃபோஸ் வன்
போயிங் 747-200 ஈ வகையைச் சேர்ந்த விமானமான இதனை 'பறக்கும் வெள்ளை மாளிகை' என்றும் அழைப்பர்.

| பெறுமதி மில்லியன் டொலர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நிறை தொன் | வேகம் மணிக்கு கி.மீற்றர் |
|---|---|---|---|---|
| 325 | 70.6 | 59.8 | 37.5 | 925 |

- த மெரீன் வன்
ஜனாதிபதி வானில் நாட்டுக்குள் பயணிப்பதற்காக பயன்படுத்தும் ஹெலிகொப்டர் இதுவே. இதில் அதிக நேரம் வானில் ஒரே இடத்தில் தரித்து நிற்க முடியும்.

| விமானத்தின் நீளம் அடி | விமானத்தின் உயரம் அடி | நிறை தொன் | வேகம் மணிக்கு கி.மீற்றர் | ஆசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 72.8' | 16.10' | 08 | 218 | 15 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகில் துருப்பிடிக்காத இரும்புத் தூண்



இரும்பினாலான பொருட்கள் துருப்பிடிக்கும் தன்மை கொண்டவை. ஆனால் முழுமையாக இரும்பினாலான தூண் ஒன்று பல ஆண்டுகளாக துருப்பிடிக்காது சிறந்த முறையில் காணப்படுகின்றது. அந்த தூண் பற்றிய விபரங்கள் இதோ...

## இரும்புத் தூணின் அமைவிடம்

இந்தியாவின் தலைநகராக புதுடெல்லி அருகே 'மேகரூலி' என்ற இடத்தில் இந்த இரும்புத் தூண் உள்ளது.இது குப்தர்கள் காலத்தில் நிறுவப்பட்டது. அக்காலத்தில் வாழ்ந்த மன்னரான இரண்டாம் சந்திர குப்தரால் இந்த இரும்புத் தூண் நிறுவப்பட்டது. 1600 ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் 24 அடி உயரத்துடனும் ஆறு தொன் எடையுடனும் இது உருவாக்கப்பட்டது. இதனுடைய அடிப்பாகம் நிலத்தினுள் ஒரு மீற்றர் புதைக்கப்பட்டுள்ளது. இத்தூணில் சமஸ்கிருத வாசகங்கள் பிராமி எழுத்துகளைக் கொண்டு பொறிக்கப்பட்டு உள்ளது.



## துருப்பிடிக்காமைக்கான காரணம்

மிகச் சுத்தமான எந்தவொரு உலோகத்தையும் வெளிப்புறக் காரணிகளால் துருப்பிடிக்க செய்யமுடியாது. ஆனால் இந்த தூண் சுத்தமான இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளமையால்தான் துருப்பிடிக்காது இத்தனை காலம் நிலைத்துள்ளது.



## இவ்வாறான தூண்களை தற்காலத்தில் உருவாக்க முடியுமா?

அது அவ்வளவு சுலபமான காரியமில்லை. நவீன யுகத்தில் சுத்தமான உலோகங்கள் கிடைப்பது கடினம். மேலும் அவை மிக விலை உயர்ந்தவை. தற்காலத்தில் சுத்தமான உலோகங்களைக் கொண்டு பொருட்கள் செய்வதும் கடினம். உதாரணமாக, தூய தங்கத்தில் ஆபரணங்களை உருவாக்க சிறிதளவு செம்புக் கலவையைப் பயன்படுத்துகிறார்கள்.


## துருப்பிடிக்காமல் இருக்க என்ன செய்யலாம்?

இரும்பினாலான பொருட்கள் துருப்பிடிக்காமல் இருக்க பொருட்களின் வெளிப்புறம் சமதளமாக வழவழப்பாக செய்யப்பட்டிருப்பது அவசியமாகின்றது.

இரும்பின் மேல் பகுதி சொரசொரப்பாக இருந்தால் அதில் தண்ணீர் தேங்கி துருப்பிடித்துவிடும். அதனால்தான் தற்காலத்தில் பொருட்களின் மேல் பகுதி வழவழப்பாக செய்வதற்காக பாத்திரங்களின் மேற்புறத்தில் வெள்ளீயம் பூசுகிறார்கள். இவ்வாறு வெள்ளீயம் பூசப்பட்ட பாத்திரங்கள் சில வருடங்களுக்கு மட்டும் துருப்பிடிக்காமல் இருக்கும்.

ஆனால் டெல்லியில் அமைக்கப்பட்டுள்ள குறித்த இரும்புத் தூணானது துருப்பிடிக்காமல் இருக்க இதுபோன்ற மேல்பூச்சுகளாக வெள்ளீயம் எதுவும் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலை உணவின் அவசியம்

எமது அன்றாட உணவு வேளைகளில், காலை உணவு அத்தியாவசியமானது. இன்று பலரும் காலை உணவை தவிர்த்து வருகின்றனர். இந்நிலை தொடருமானால், அடிக்கடி உடல் நலன் பாதிப்படையக்கூடும் என உணவியல் வல்லுனர்கள் எச்சரிக்கின்றனர். நாளொன்றில் நம் உடலுக்குத் தேவையான சக்தியில், அதிக சக்தியைக் கொடுப்பது இந்த காலை உணவுதான். எனவே, அது சத்துமிக்கதாக இருக்க வேண்டும். காலை உணவாக துரித உணவுகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். தானிய வகைகள், அதிகம் எண்ணெய் சேர்க்கப்படாத உணவுகள், முட்டை, பால் போன்றவற்றை காலை உணவில் சேர்த்துக்கொள்வது உடலுக்கு நல்லது.



# உலகின் ஆழமான நதி

ஆபிரிக்காவின் கொங்கோ நதிதான் உலகிலேயே மிகவும் ஆழமான நதியாகும். இந்த நதியின் சில இடங்களின் ஆழம் 220 மீற்றருக்கும் அதிகம் எனக் கூறப்படுகின்றது. நைல் நதிக்கு அடுத்து ஆபிரிக்காவின் மிக நீளமான நதியும் இதுவாகும். இது 4,700 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. உலகின் நீளமான நதிகளின் வரிசையில் கொங்கோ நதி ஏழாவது இடத்தை வகிக்கின்றது. அத்துடன், உலகில் அமேசன் நதிக்கு அடுத்ததாக கூடுதலான நீரோட்டம் கொண்ட நதியும் இதுவாகும்.

இந்த நதி முன்னர் 'சயர் நதி' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. கொங்கோ நதியும் அதன் கிளை நதிகளும் கொங்கோ ஜனநாயக குடியரசு, கொங்கோ குடியரசு, அங்கோலா, புருண்டி, கெமரூன், ருவண்டா, செம்பியா, தன்சானியா ஆகிய நாடுகளை வளப்படுத்துகின்றன. உலகில் பூமத்திய ரேகையை இரண்டு தடவைகள் கடக்கும் ஒரே நதியும் கொங்கோ நதியாகும்.

# மாசடைந்து வரும் கடல்

தொழிற்சாலைக் கழிவுகள், எண்ணெய்க் கசிவு, கடலில் கொட்டப்படும் கழிவுகள் போன்றவற்றால், கடல் நீர் மாசடைந்து வருகின்றது. இதனால்,





கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் பவளப் பாறைகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. கடலில் கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொள்வதனால் கடல்வாழ் உயிரினங்கள் இறக்கின்றன. உலகெங்கும் ஓர் ஆண்டுக்கு சுமார் 8 மில்லியன் தொன் பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் கொட்டப்படுவதாக அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இந்நிலை தொடருமானால், 2030 ஆம் ஆண்டாகும்போது இந்த அளவு இரு மடங்காக அதிகரிக்கும் என்றும் அப்போது கடலில் வாழும் உயிரினங்களைவிட, கடலில் சேரும் கழிவுகளின் அளவே அதிகமாக இருக்கும் என்றும் அந்த ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# காகித சுவாரஸ்யங்கள்

* தற்போது நாம் பயன்படுத்தும் காகிதத்தை உலகில் முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு சீனா ஆகும். அது கி.பி. 105 ஆம் ஆண்டிலாகும்.
* அன்றிலிருந்து சுமார் 800 ஆண்டுகள் கடக்கும் வரை சீனர்களின் காகித உற்பத்தி ரகசியம் பற்றி உலகம் அறிந்திருக்கவில்லை.
* இன்றளவில் உலகில் அதிகளவு காகித உற்பத்தியில் ஈடுபடும் நாடு சீனா ஆகும். அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, கெனடா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களை வகிக்கின்றன.
* ஒரு கிலோகிராம் காகிதத்தை உற்பத்தி செய்ய 324 லீற்றர் நீர் தேவைப்படுகின்றது.
* 93 சதவீதமான காகிதங்கள் மரங்களிலிருந்தே உற்பத்தி செய்யப்படுகின்றன.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினரால் 2017, பெப்ரவரி 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 01, 2017.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org